**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24- ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

O.S. NO. 70/2018

**வா.சா.1**

**திரு. ஜெயன்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு முதல்விசாரணை தொடர்ச்சி**

11-04-1983 தேதியிட்ட தாவா சொத்தின் கிரையப்பத்திரம் சான்று நகல் **வா.சா.ஆ.1 ஆகவும்,** 09-11-2015 தேதியிட்ட தங்கச்சனின் இறப்பு சான்றிதழ் சான்று நகல் **வா.சா.ஆ.2 ஆகவும்,** 26-09-2016 தேதியிட்ட லீலாவின் இறப்பு சான்றிதழ் சான்று நகல் **வா.சா.ஆ.3 ஆகவும்,** 10-05-2017 தேதியிட்ட தாவாச் சொத்தின் தண்ணீர் கட்டண ரசீதுகள் எண்ணிக்கை 4 அசல் **வா.சா.ஆ.4 ஆகவும்,** 10-05-2017 தேதியிட்ட தாவாச்சொத்தின் சொத்துவரி ரசீதுகள் எண்ணிக்கை-5 அசல் **வா.சா.ஆ.5 ஆகவும்,** தாவாச்சொத்தின் மின் கட்டண ரசீதுகள் எண்ணிக்கை -5 அசல் **வா.சா.ஆ.6 ஆகவும்,** 17-05-2017 தேதியிட்ட தங்கச்சனின் வாரிசு சான்றிதழ் சான்று நகல் **வா.சா.ஆ.7 ஆகவும்,** 06-10-2018 தேதியிட்ட வாதி மற்றும் 2ம் பிரதிவாதி தரப்பில் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.8 ஆகவும்,** 11-10-2018 தேதியிட்ட பிரதிவாதி அறிவிப்பினை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் **வா.சா.ஆ.9 ஆகவும்,** 07-09-2020 தேதியிட்ட லீலாவின் வாரிசு சான்றிதழ் கணினி நகல் **வா.சா.ஆ.10 ஆகவும்,**

07-09-1988 தேதியிட்ட வாதியின் பள்ளி சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.11 ஆகவும்**, 29-11-1993 தேதியிட்ட 2ம் பிரதிவாதியின் திருமண அழைப்பிதழ் அசல் **வா.சா.ஆ.12 ஆகவும்**, 03-05-1989 தேதியிட்ட 2ம் பிரதிவாதியின் பூப்பு நன்னீராட்டு விழாவுக்கு எடுத்த புகைப்படம் -3 அசல் **வா.சா.ஆ.13 ஆகவும்**, உபயவாதிகளின் தாய் லீலாவுடன் அய்யப்பசாமி தரிசன புகைப்படங்கள் -2 அசல் **வா.சா.ஆ.14 ஆகவும்**, உபயவாதிகள் அவர்களது பெற்றோர்களுடன் எடுத்துக் கொண்ட குடும்ப புகைப்படம் அசல் **வா.சா.ஆ.15 ஆகவும்**, வாதியின் ஆதார் அட்டை ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ 16 ஆகவும் குறியீடு செய்ய வேண்டுகிறேன். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**